# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No. 231/2025** |
| Prosecution witness | : | P.W. 2 (Additional witness) |
| Name | : | சாமுவேல் |
| Father's /Husband Name | : | பொன்னுதுரை |
| Village | : | எரவாஞ்சேரி காவல் நிலையம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 33 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 16th day of April 2026. A2 to A5 present. A1 died.

**முதல் விசாரணை**

நான் தற்போது எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு.ஆறுமுகம் என்பவர் பணி ஓய்வு பெற்று உடல் நிலை சரியில்லாமல் சாட்சியமளிக்க இயலாத நிலையில் உள்ளதாலும் மேற்படி உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையில் நீதியின் நலன்கருதி காலதாமதத்ததை தவிர்க்கும் பொருட்டு நான் இவ்வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 27.09.2021ம் தேதி அன்று காலை 11.30 மணியளவில் எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது உதவி ஆய்வாளர் திரு. ஆறுமுகம் என்பவருடன் தலைமை காவலர்கள் பிரம்மா மற்றும் சுரேஷ் ஆகியோர்களுடன் எரவாஞ்சேரி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் ரோந்து பணியில் இருந்த போது எரவாஞ்சேரி கடை தெருவில் கூட்டம் கூடுவதாக மேற்படி உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்படி மேற்படி போலீசார் அங்கு சென்று பார்த்தபோது அன்பழகன், சந்திரகாசன், பாஸ்கர், நடராஜன் மற்றும் பலர் நபர்கள் ஒன்று கூடி உழவர் விரோத சட்டங்கள் மின்சார சட்ட திருத்த மசோதா ஆகியவைகளை ரத்து செய்ய வேண்டுமென்று குறைந்த பட்ச ஆதாரா விலைக்கு சட்ட அங்கீகாரம் பெற வேண்டுமென்று நான்கு தொகுப்பு சட்டங்களை திரும்ப பெறவேண்டுமென்று மேற்படி நபர்கள் அனைவரும் 144 கு.வி.மு.ச. தடை உத்தரவை மீறி சாலையை மறித்து சாலை மறியல் செய்துள்ளார்கள். அந்த கால கட்டமானது கொரோனா வைரஸ் தாக்குதல் காரணமாக தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மேற்படி நபர்கள் கூட்டம் கூடி சாலை மறியல் செய்வதற்கு ஆர்பாட்டம் செய்வதற்கும் எவ்வித முன் அனுமதியோ பெறவில்லை. மேற்படி நபர்களிடம் சட்ட விரோதமாக கூட்டம் கூடி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியவர்களிடம் மேற்படி உதவி ஆய்வாளர் எச்சரித்தும் அதை கேளாமல் கோஷம் போட்டுவிட்டு 11.30 மணிமுதல் 11.45 வரை போராட்டம் செய்தவர்களை கைது செய்ய முற்பட்ட போது தன்னிச்சையாக கலைந்து சென்றுவிட்டார்கள். பின்னர் உதவி ஆய்வாளர் நிலையம் வந்து எதிரிகள் மீது காவல் நிலைய குற்ற எண் 493/2021 இதச சட்டப்பிரிவுகள் 143, 341, 270 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைஅ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் பட்டியல் சாட்சிகள் 1முதல் 2 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் எதிரிகளளை தேடிவந்த நிலையில் எதிரிகள் தலைமறைவாகிவிட்டார்கள்.

இத்துடன் அவரது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டப்பிரிவுகள் 143, 341, 270 ன் கீழ் தண்டித்தக்க குற்றம் என கடந்த 27.09.2021 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

நான் சொன்ன நாள் சொன்ன நேரம் சொன்ன இடத்தில் உதவி ஆய்வாளர் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொதுமக்கள் இடையூறு செய்ததாக யாரேனும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் உதவி ஆய்வாளரே புகார் தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். எதிரிகள் இடையூறு செய்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம்அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் சரிவர சட்டவிதிமுறைகளை பின்பற்றாமல் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 16:34:20 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.